www.padippakam.com

# தமிழீழத்திற்கு மாற்றுவழி இல்லை.

சிறிலங்காவில் இரு இனங்களுக்கிடையே நடைபெறும் சச்சரவு பிரியும் கட்டத்தை அடைந்துவிட்டதாகத் தோன்றுகிறது. இவ்வேளையில் ஈழத்தைத்தவிர மாற்றுவழி இல்லையாஎன தமிழ்த் தலைவர்களின் கருத்துக்களை வீக் (WEEK) இதழ் அறியும் பொருட்டு பேட்டி கண்டது. இது தொடர்பாக கூட்டணியின் சார்பில் அமிர்தலிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் பாலசிங்கம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் உமாமகேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலதிபர் சிறிசபாரத்தினம், ஈழ புரட்சிகர அமைப்பின் புரட்சிகர நிறைவேற்றுக் குழு உறுப்பினர் பாலகுமார் ஆகியோரை பேட்டிகாண முடிந்தது.

கேள்வி – தமிழீழப் போராட்டம் தற்போது அதன் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதா, அதன் விளைவுகள் என்ன?

அமிர்தலிங்கம் – ஆம். இன்று உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது என்றுதான் நினைக்கின்றேன். ஏனென்றால், அரசு கூடிப்பேசித்தீர்க்கும் வாயில்களை மூடிவிட்டது. அரசே ஆரம்பித்த இரு முயற்சிகளை அரசே கைவிட்டதோடு பேச்சுவார்த்தையுல் கூட்டணி கலந்து கொள்வதாயின், தமிழீழக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமென்ற பழைய பல்லவியை முன்நிபந்தனையாகவும் விதித்துள்ளது. இது சாத்தியமற்றது என்று யாவரும் அறிந்ததே. கடந்த தேர்தலின்போது கூட்டணி தமிழீழக் கோரிக்கையை மக்கள் முன்வைத்தே மிகப்பெரிய வெற்றியை ஈட்டியது. எனவே மக்களாணையான தமிழீழ கோரிக்கையை வென்றெடுக்க அதுபாடுபடுமேயன்றி ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை. தமிழர் சிங்களவர் உறவு குறித்து எப்போதும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கும் நிலையிலேயே இருந்து வந்துள்ளோம். தமிழருக்கு எதிரான இன்னொரு இனக்கலவரம் சிங்களப் பகுதிகளில் ஏற்பட வாய்ப்புண்டு. நாங்கள் தொடர்ந்துகொந்தளிப்பான நிலையிலேயே இருந்து வருகின்றோம்.

கேள்வி – தமிழீழம் கோரும் அமைப்புக்களுக்கிடையே ஒற்றுமை பற்றிப் பேசப்படுகிறது இது நிகழக்கூடியதா?

பாலகுமார் – ஒற்றுமைக்கு நாங்கள் மிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஏற்கெனவே கடந்தாண்டு ஏப்ரல் மாதம் ஈரோஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய அமைப்புக்கள் ஒருங்கிணைந்து ஈழத்தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை அமைத்துள்ளோம். இம் முன்னணி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் கடந்த நான்கு மாதங்களாகக் கூடிப்பேசி 90 வீதமான இலக்கம் ஏற்பட்டுள்ளது. எமது முன்னணியின் ஒரு அமைப்புக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள மிகச்சிறிய பிரச்சனைகளும் கூட மிகவிரைவில் தீர்க்கப்படும்.

அமிர்தலிங்கம் – வாய்ப்புகள் எங்களுக்கு எதிராக இருக்கும் என்ற எண்ணம் தம்பிமாரிடம் இருக்கலாம் என்று நினைக்கிறேன். எண்ணிக்கையில் எங்களைவிட அவர்கள் மூன்றுமடங்கு அதிகமாக உள்ளனர், அன்றியும் அவர்கள் பல நாடுகளிலிருந்து வாய்ப்பு வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும். எப்படியிருந்த போதும் ஒற்றுமைப்பேச்சுக்கு புலிகள் மட்டுமே வரவில்லை.

கேள்வி – புலிகள் இணைவு முயற்சிக்கு இசைவு தராமல் அடம்பிடிப்பதேன்?

பாலசிங்கம் – நாங்கள் இணைவு முயற்சிக்கு இசைவு தந்திடாமல் இருக்கிறோம் என்பதில் உண்மையில்லை. அரச படைகளை எதிர்த்துப்போராடும் செயல் நடவடிக்கையில் ஒன்றிணைய வருகிறோம் என்றே நெடுகிலும் சொல்லிவருகிறோம்.

அமிர்தலிங்கம் – ஒற்றுமை பேச்சுக்கு மறுமொழி தராதவர்கள் புலிகள் மட்டுமே, அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒற்றுமைக்கான பேச்சுவார்த்தைகளில்

படிப்பகம்

www.padippakam.com

இவர்கள் ஏன் கலந்துகொள்ளவில்லை? அவர்கள் தாங்களே தமிழீழத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று நினைத்தால் அது பெரும் தவறு என்றும், எதிரியை அவர்கள் சரிவர விளங்கிக்கொள்ளவில்லை என்றும் புலிகளுக்குக் கூற விரும்புகிறேன்.

கேள்வி – உங்கள் அமைப்புகளுக்கிடையே குழுச்சண்டைகள் இடம்பெறுவதாக பல குற்றச்சாட்டுக்கள் உண்டு. இவ்விதம் தீராப் பகையுணர்வுள்ள தாங்கள் எப்படி ஒன்று சேர முடியும்?

உமாமகேஸ்வரன் – எங்களுக்கிடையே குழுச்சண்டைகள் இருப்பதாகக் கூறுவதில் உண்மையில்லை. ஆனால் பல அமைப்புக்கள் இருக்கும்போது கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயற்கை, இவ்வேற்றுமைகளைக் களைந்து விரைவில் ஒன்றுபடுவோம் என்பது உறுதி. ஏற்கனவே ஏனைய அமைப்புகளுடன் கூடிப்பேசி எதிரியை முறியடிக்கும் ஆயத்த நிலையில் இருக்கின்றோம். ஏனைய அமைப்புக்களுக்கிடையே நிலவும் வேற்றுமைகளையும் தலைவர்களுக்கிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளையும் களைந்து ஒன்றுபட்டே தீருவோம். அமையவிருக்கும் கூட்டுமுன்னணியின் தலைவராக யார்வருதல் வேண்டுமென்பதில் நாங்கள் எதுவித முன்நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதைக் கூறவிரும்புகின்றேன். இதை விடுதலைப் புலிகளுக்கும் தெரிவித்துள்ளோம். பிரபாகரன் (புலிகளின் தளபதி) கூட மேல்நிலைப் படைத்தளபதியாக வரலாம். ஆனால் இதுவரை அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை.

சிறிசபாரத்தினம் – எங்கள் சிலருக்கிடையே பிரச்சினை இருக்கிறது என்பது உண்மை என்னைக் கொல்வதின் மூலம் ரெலோவை அழித்துவிடலாம் என்பது எனநினைப்பது தவறு. (சிலமாதங்களுக்கு முன்பு சிறிசபாரத்தினத்தைக் கொல்லும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டார்கள் என்றும், இச்சதி வெற்றியளிக்கவில்லை என்றும் செய்தி வெளியானது.) என்னைக் கொல்ல முயற்சிகள் எடுத்தும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. இப்பொழுது அவற்றையெல்லாம் மறந்து ஒற்றுமை முயற்சியில் ஈடுபடத்தயாராக உள்ளேன். ஏனென்றால் நாளும்பொழுதும் எமது மக்கள் இராணுவத்தால் கொல்லப்படுகிறார்கள். நாங்கள் ஏதாவது செய்து விடிவைத்தேடி தருவார்கள் என்று எமது மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

பாலசிங்கம் – விடுதலைப் புலிகள் சிறிசபாரத்தினத்தைக் கொல்ல முயன்றார்கள் என்பதில் உண்மையில்லை. அவர்களுக்கிடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாக நாங்கள் குற்றம்சாட்டப்பட்டோம். ஆனால் அப்படிப்பட்ட வேற்றுமைகள் குறித்து பேசுவதற்கு இன்று ஏற்ற தருணமல்ல.

கேள்வி – உங்கள் ஒற்றுமைப் பேச்சுவார்த்தை எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது?

அமிர்தலிங்கம் – இன்றைய நிலையில் இளைஞர் அமைப்புக்கள் யாவும் முதலில் ஒன்றுபடவேண்டுமென்பதே கூட்டணியின் நிலைப்பாடு. இதற்குப் புலிகளைத்தவிர ஏனையோர் நல்லிணக்கம் தெரிவித்துள்ளனர். புலிகளும் விரைவில் இணைவார்கள் என நம்புகிறேன்.

சிறிசபாரத்தினம் – நாங்கள் தனிப்பட்ட ரீதியிலும் எமது முன்னணியின் ரீதியிலும் பல தடவைகள் புலிகளை அணுகினோம், இன்னும் முயற்சிசெய்துகொண்டே இருக்கின்றோம். நாம் எல்லோரும் கூடிப்பேசுதல் வேண்டும். இந்த இக்கட்டானநிலையில் ஒவ்வொருவரும் மற்றவரைவிட நான் பெரியவர் என நினைத்தால் அவர்கள் ஈழத்தின் துரோகிகளாகவே இருப்பர். கடந்தகால மனத்தாங்கள் போன்ற சிறிய விடயங்களையும் எதிர்கால தலைமைக்கான தனிப்பட்ட அவாக்களையும் மறந்து நாளும் வலிமை பெற்றுவரும் எதிரியை முறியடிப்பதில் ஒன்றுபடவேண்டும்.

கேள்வி – இயக்கங்களுக்கிடையே ஏற்படும் ஒற்றுமை ஈழத்தமிழருக்கு எந்தவகையில் உதவி செய்யும்?

படிப்பகம்

www.padippakam.com

அமிர்தலிங்கம் – எல்லாத்தரப்பினரும் பங்கு கொள்ளக்கூடிய ஒன்றுபட்ட மக்கள் போராட்டமாக இருத்தல் வேண்டும். தனிப்பட்ட முறையில் எங்கள் சக்தியை வீணாக்குவதில் பயனில்லை. பலர்கூடிச் செயற்படும்போதே விரைவான பயன் கிட்டும். எல்லா அமைப்புக்களும் ஒன்று சேர்ந்தாலும்கூட தமிழீழம் எளிதில் கிடைத்துவிடுமென்று நான் எண்ணவில்லை. ஆனால் எங்கள் பகுதிகளில் நடைபெறும் இராணுவ வெறியாட்டத்தையாவது நிறுத்தலாம்.

கேள்வி – அப்படியாயின் ஒற்றுமைக்குத் தடையாய் இருப்பது என்ன?

சிறிசபாரத்தினம் – எல்லோரும் ஒற்றுமையைப்பற்றி பேசுகிறார்களே தவிர செயலில் காட்டவில்லை. நாங்கள் ஏனைய இரு அமைப்புக்களுடன் இணைந்துள்ளோம். இதேபோன்று மற்றவர்களும் ஏன் இணையமுடியாது? நாங்கள் மற்றவர்களுக்கு சலுகைகள் அளிக்கத்தயாராக உள்ளோம். போராட்டக்காலத்தின் போது பிரதேசச்செல்வாக்குகளை அந்தந்த அமைப்புகளுக்கு விட்டுக்கொடுக்க ஆயத்தமாகவுள்ளோம்.

கேள்வி – உங்கள் ஈழப் போராட்டத்திற்கு இந்தியா எந்த வகையில் உதவவேண்டுமென்று எதிர்பார்க்கின்றீர்கள்?

அமிர்தலிங்கம் – இந்திய அரசும் நாங்களும் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அதனாலேதான் புதிய முயற்சியில் ஈடுபடவேண்டும் என்கின்றேன். என்னமாதிரியான முயற்சி என்பதை இந்தியாவே முடிவு எடுத்தல் வேண்டும். அதைநான் சொல்வதற்கு இல்லை, மறைமுகமாக இந்தியாவுக்குக் கூறியுள்ளேன். ஆனால் வெளிப்படையாக சிறிலங்காவில் நடைபெறும் இனப்படுகொலையையும் அங்கிருந்து தப்பிவரும் தமிழர் பிரச்சனையையும் நிறுத்தும்படி மட்டுமே கூறமுடியும். எங்களுக்காகவாதாடும்படியும்ஈழத்திற்கு உதவும்படியும் நாங்கள் இந்தியாவைக் கோரமுடியாது. ஆனால் அங்கே நடைபெறும் இனப்படுகொலையை நிறுத்தும்படி மட்டுமே கூற முடியும்.

பாலகுமார் – மற்றவர்களின் உதவியின்றியே நாம் பலகாலம் செயற்பட்டு வந்துள்ளோம். இங்கு (இந்தியா ) என்ன நடந்தாலும் இனிமேலும் இப்படியே செயற்படுவோம். ஆனால் எங்கள் போராட்டத்திற்கு இந்தியாவிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கிறோம். இவ்வுதவிகள் ஆயுதங்கள் போன்றவையாகவே இருத்தல் வேண்டுமென்பதில்லை.

சிறிசபாரத்தினம் – பிரதமர் ராஜீவ் புதுநம்பிக்கை எங்களுக்களித்துள்ளார். இடைவிடாத இனப்படுகொலையை பொறுத்துக்கொண்டிருப்பவர் அல்லர் அவர். எங்கள் பிரச்சனையில் இந்தியா தலையிடுவதற்கு உரிமையும் காரணமும் உண்டு. இந்திய அரசு உதவியேதும் வழங்கினால் அது அரசபயங்கரவாதத்திற்கு அஞ்சி அங்கிருந்து தப்பிவரும் சாதாரண மக்களின் துயர்த்துடைக்கவே பயன்படுத்தப்படுகிறது. இந்தியா எங்களுக்கு ஆயுதங்களோ பயிற்சியோ அளிப்பதில்லை. இவைகள் யாவும் தமிழீழத்திலுள்ள எங்கள் சொந்தப் பகுதிகளிலேயே நடைபெறுகின்றன. வெளிநாடுகளில் வாழும் எம்மவர்கள் வழங்கும் நிதியுதவிகள் மூலமே ஆயுதங்கள் வேண்டுகின்றோம்.

கேள்வி – பிரிந்து சென்றிடாமல் இணைந்து வாழும் இணைப்பாட்சி முறையை ஏற்கும்படி இந்தியா வலியுறுத்தினால் உங்கள் நிலைப்பாடு என்ன?

சிறிசபாரத்தினம் – எங்கள் மக்கள் விருப்பத்தை நிறைவு செய்யாத எந்தத் தீர்வையும் ஏற்கும்படி எங்களை இந்தியா கட்டாயப்படுத்தாது என்று திடமாக நம்புகிறோம். ஏனென்றால், எங்கள் மக்கள் தமிழீழத்தில் மட்டுமே அமைதியாக வாழமுடியும் என்று நம்புகின்றனர்.

பாலகுமார் – இந்தியா அப்படி எங்களைக் கட்டாயப் படுத்தாது என்றே நம்புகிறோம். அப்படிச்செய்யுமாயின் நாம் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவோம்.

சிறிசபாரத்தினம் – தமிழீழம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு இன்றியமையாத இடமாக இருக்கின்றது. இந்துசமுத்திரத்தில் ஊறுபடத்தக்க கேந்திர முனையில் நாம் இருக்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்கா ஜெயவர்த்தனாவினதும், அவரது இனவாத அரசினதும் நண்பனாகி இங்கே ஆதிக்கம் செலுத்த முயல்கிறது. டியாகோ காசியாவிற்குப் பின்பு அமெரிக்காவின் பார்வை திரிகோணமலையின் விழுந்துள்ளது. இது இந்தியாவின் பாதுகாப்பிற்கு உகந்ததல்ல.

கேள்வி – தமிழீழப் போராட்டத்தில் தொண்டமானின் பங்கு என்ன?

பாலகுமார் – அவர் அமைச்சர் பதவியில் இருக்கிறார், அவரின் தோட்டத்தொழிலாளர்கள் சிங்களவர் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளில் வாழ்கின்றார்கள். எனவே அவர் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கின்றார், என்றாலும் அவர் ஏதாவது செய்வார் என்றே நினைக்கின்றேன், அவர் என்ன செய்வார் என்று இப்போது கூறமுடியாது. அண்மையில் தமிழருக்கெதிரான அரசின் அடக்குமுறை குறித்து கடுமையாய் பேசியுள்ளார். இருந்த போதிலும், எமது சில இளைஞர்கள் மலையகத்தில் கைதுசெய்யப்பட்டபோது தொண்டமான் எதுவும் செய்யவில்லை.

அமிர்தலிங்கம் – இது ஒரு தனிப்பட்டவரின் பிரச்சனையல்ல. மலையகத்தமிழருடைய அனைய தமிழரும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும். இதற்குத் தேவையான அனைத்தையும் நாம் செய்வோம். அவர் அமைச்சரவையிலிருந்தபோதும் அவருடன் இதுவரை எமக்கு எதுவித பிரச்சனையும் ஏற்படவில்லை. வடக்கில் சிங்களவரை குடியமர்த்த திட்டமிட்டு இருக்கும் அரசின் செயலை அவரின் தொழிலாளர் காங்கிரஸ் வெளிப்படையாகக் கண்டித்துள்ளது.

கேள்வி – அமிர்தலிங்கம் அவர்களே கடந்தகாலத்தில் ஜெயவர்த்தனாவின் நண்பராக இருந்திருக்கின்றீர்கள் தமிழரின்பால் அவரின் போக்குபற்றி மனத்தாங்கலும், ஏமாற்றமும் ஏற்பட்டதுண்டா?

அமிர்தலிங்கம் – சிங்களப் பிற்போக்குவாதத்தை எந்த நிலையிலும் எதிர்த்து நிற்கக் கூடிய நிலையில் அவர் இருந்ததில்லை. 1957இல் பண்டா–செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்ததைத் தொடர்ந்து இன்றுவரை சிங்களப் பிற்போக்குவாதிகளுக்கு அடிபணிபவராகவே இருந்து வந்திருக்கின்றார். எனவே அவரின் போக்குபற்றி ஏமாற்றம் ஏற்பட்டபோதிலும் வியப்பு ஏற்படவில்லை. சிங்களப் பிற்போக்குவாதிகளை அவரால் எதிர்த்து நிற்க முடியும் அன்றி, தமிழரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் தமிழருக்கு அடிபணிந்தவர் என சிங்கள வரலாற்றில் இடம்பெற்றுவிடுவார், இதை அவர் விரும்பவில்லை. இதையே அவரின் அரசியல் நடவடிக்கைகள் நிரூபிக்கின்றன.

---

WEEK என்ற இந்திய ஆங்கில பத்திரிகையில் பிரசுரமான பேட்டியை கருத்துக் குலையாமல் தமிழாக்கம் செய்திருக்கின்றோம்.

இப்பத்திரிகை வெளிவரும் சந்தர்ப்பத்தில் (மார்ச்–10), சென்னையில் படைத்துறைச் செயலாளர் கண்ணன் கடத்தப்பட்டார் (மார்ச்–7), பிரான்சில் கழக அமைப்பாளர் தாக்கப்பட்டார் (மார்ச்–10), மேற்கு ஜேர்மனியில் நெம்சைட் என்ற இடத்தில் கழக அமைப்பாளரும், இளைஞர்களும் தாக்கப்பட்டனர் (மார்ச்–3). இச்சம்பவங்கள் நடக்கும்போது விடுதலை இயக்கங்களுக்கிடையே தமிழீழ விடுதலைப்போராட்ட தயாரிப்புக்களைப்பற்றி நிலவிய கருத்துக்களை இப்பேட்டி தெளிவாக்குகின்றது.

---

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

பிரான்சு.

படிப்பகம்